# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
# International Association of Tamil Research – IATR
(Registered in India as World Tamil Research Association- WTRA)
(CIN: U80300TN2016NPL110744)


CENTRAL COUNCIL

**PRESIDENT**
Sir Dr.M. Ponnavaikko
Former Vice-Chancellor of
Bharathidasan University,
SRM University,
Bharath University and
Tamil Virtual University

**VICE-PRESIDENTS**
Dr.E.Sundaramoorthy, India
Dr.Francis S. Muthu, USA
Mr.Siva Pillai, UK

**SECRETARIES-GENERAL**
Dr.Ulaganayagi Palani, India
Mr.ArasarArullallar, USA
Dr.A.Shanmugadas, Sri Lanka

**TREASURER**
Mr.Paul Pandian, USA
Mr.Arthanareeswaran, India

**CO-ORDINATOR**
Dr.P.Marudanayagam (India)


செப்டம்பர் 15, 2022

## உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின்
## செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள்

தவத்திரு தனி நாயகம் அடிகளார், தமிழ்மீது தாம் கொண்ட தீராத காதலால், தமிழ்மொழிக்கு உலகளாவிய அளவில் உலகக் கவனிப்பை உருவாக்க ஓர் அமைப்பு தேவையென்பதை உணர்ந்து, 7.1.1964-ல் புதுடெல்லியில் கீழ்த் திசையறிஞர்களின் மாநாடு கூடியபோது "உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்" என்ற ஒன்றினை திருவாளர்கள் ஏ.சுப்பையா, பிலியோசர், பர்ரோ, எமனோ, கூப்பர், சுவலெபிஸ், T.P.மீனாட்சிசுந்தரம், V.I.சுப்பிரமணியம் போன்றோர் உதவியுடன் கீழ்க்காணும் நோக்கங்களுடன் ஒரு உலகு தழுவிய தமிழ் ஆராய்ச்சி மன்றத்தைத் தொடங்கினார்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஒரு, அரசியல் சார்பற்ற, ஆதாய நோக்கம் இல்லாத அமைப்பு. உலகம் முழுவதும் தமிழ் ஆய்வை மேற்கொண்டு, சிதறிக் கிடக்கின்ற சிறு நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்துதல், தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பொதுவானவற்றைப் பரிமாற்றம் செய்து கொள்ளுதல், பிறநாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழைப் பாடமாக அமைத்தல், அப்பல்கலைக்கழகப் பேராசிரியர்களைத் தமிழாராய்ச்சியில் ஈடுபடச் செய்தல், தமிழ்மொழி, தமிழ்க்கலை, தமிழிலக்கியம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றைப் பற்றி பல்கலைக்கழகத் தொடர்புகளை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களுடன் செயல்பட இம்மன்றம் தொடங்கப்பட்டது.

இந்த அமைப்பை பதிவு செய்யவும், வங்கி கணக்கைத் தொடங்கவும், இந்திய நாட்டு சட்டத்தேவைகளுக்கேற்ப 2016-ஆம் ஆண்டு, சூன் மாதம், ஆங்கிலத்தில் "World Tamil Research Association," என்ற பெயரில் இந்த அமைப்பு பதிவு செய்யப்பட்டது.

மேலும், மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் 1987-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ஆம் தேதி நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் கடைசியாக திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறைகளுக்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் கட்டுப்பட்டது. அதன்படி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்களாக, இந்தியக் குடிமகனாக உள்ள மன்றத்தின் நிர்வாகிகள் இருப்பார்கள். அத்தோடு, அன்றாட செயல்களை மேலாண்மை செய்யும் பொறுப்பையும், உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்த அனுமதி வழங்கும் உரிமையும் இந்தக் செயற்குழுவிற்கு மட்டுமே மன்றத்தின் விதிமுறைகள் வழங்கியுள்ளது.

இம்மன்றத்தின் முதல் உலகத் தமிழ் மாநாடு 1966-ஆம் ஆண்டு கோலாலம்பூரில் நடத்தப்பெற்றது. அதை அடுத்து, கோலாலம்பூரில் மூன்று மாநாடுகளும், சென்னை, பாரீசு, ஜா.ஃப்னா, மதுரை மரூசியசு, தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் என ஒன்பது மாநாடுகள் நடத்தப்பட்டன. இம்மன்றத்தின் பத்தாவது மாநாடு 2019-ஆம் ஆண்டு சூலை மாதம் சிக்காகோவில் தடைபெற்றது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பொதுக்குழுக்கூட்டம் பத்தாவது மாநாட்டில், 2019-ம் ஆண்டு சூலை 5-ஆம் தேதி நடைபெற்றது. பொதுக்குழுக்கூட்டம், அப்போதைய தலைவர் *டான்சிரி தத்தோ* முனைவர் த. மாரிமுத்து அவர்கள் தலைமையில் மாலை 2 மணிக்குத் தொடங்கியது. அந்தக் கூட்டத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்வு, முனைவர் மாரிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்தத் தேர்வில் தலைவராக முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்களையும், துணைத்தலைவராக முனைவர் இ..சுந்தரமூர்த்தி அவர்களையும், பொதுச்செயலராக முனைவர் உலகநாயகி பழனி அவர்களையும், முனைவர் ப. மருதநாயகம் அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும், மற்றும் பிற உலக பிரதிநிதிகளுடன் போட்டியின்றி தேர்வானதாக மன்றத்தலைவராகவும் தேர்வுக்குழு தலைவராகவும், முனைவர் மாரிமுத்து அவர்கள் அறிவித்து, புதிதாக தேர்வான அதிகாரிகளை வாழ்த்தினார்.

இப்பொழுது, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் உலகத் தலைவராக உள்ள முனைவர் பொன்னவைக்கோ, இந்தியக் குடிமகனாகவும் இருப்பதால், அவர் இப்போதைய செயற்குழுத் தலைவராகவும் இருக்கின்றார்.

அடுத்து, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் பதினோராவது மாநாடு, 2023-ஆம் ஆண்டு சூன் மாதம் சிங்கப்பூரில் நடைபெற இந்தச் செயற்குழு இசைவளித்துள்ளது.

மேலும், இந்தச் செயற்குழு, சிக்காகோவில் நடைபெற்ற பத்தாவது மாநாட்டின் நடவடிக்கைகள் மற்றும் மாநாட்டில் அறிஞர்கள் வழங்கிய கட்டுரைகள், ஆகியவற்றை தொகுத்து, அதன் முதல் தொகுதியை, சென்னையில் 2022-ஆம் ஆண்டு சூலை மாதம் ஒரு நிகழ்ச்சியில் வெளியிட்டது.

தொடர்ந்து, இந்த செயற்குழு, சென்னை லயோலா கல்லூரியில் 2020-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழர்களின் பழமை பற்றிய முதல் தேசிய கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்தது.

மேலே கொடுத்துள்ள செய்தி, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் நிர்வாகிகள் தேர்வு, செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் செயற்குழு செயல்பாடுகள் பற்றிய உண்மை நிலையை விளக்கவே கொடுக்கப்பட்டுள்ளது.

***புலவர்*, முனைவர் பிரான்சிசு ச முத்து**
துணைத்தலைவர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
தலைவர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் - அமெரிக்கக் கிளை
தலைவர், ஆய்வுக்குழு, பத்தாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, சிகாகோ, 2019